புதுச்சேரி அரசு

போக்குவரத்து துறை

***

<u>செய்திக் குறிப்பு</u>

புதுச்சேரி போக்குவரத்து துறையின் PY-01 DH (புதுச்சேரி) வரிசையில் உள்ள பேன்ஸி எண்களை https://parivahan.gov.in/fancy என்ற இணைய தளத்தில் 01.09.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.30 வரை ஏலம் விடப்பட உள்ளது.

இந்த ஏலத்தில் பங்கு பெறுவதற்கு தேவையான பெயர் (User Name) மற்றும் கடவு சொல்லை (Password) https://parivahan.gov.in/fancy என்ற இணையதளத்தில் "New Public User" மூலமாக 26.08.2026 முதல் 31.08.2026 வரை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு பதிவு செய்தவர்கள் தங்களுக்கு தேவையான எண்களை தெரிவு செய்து அதற்குண்டான அடிப்படை தொகையை செலுத்த வேண்டும். இவ்வாறு அடிப்படை தொகையை செலுத்தியவர்கள் மட்டுமே 01.09.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.30 வரை ஏலத்தில் பங்கு பெறலாம்.

இந்த E-Auction முறையில் பங்கு பெற விரும்பும் பொது மக்கள் அதற்கான வழிமுறைகள் மற்றும் <u>ஏல நிபந்தனைகளை</u> 26.08.2026 முதல் https://transport.py.gov.in என்ற இணைய தள முகவரியில் பார்த்தும்/ மற்றும் பதிவு இறக்கமும் செய்துகொள்ளலாம். விண்ணப்பத் தொகையின் விவரம், E.M.D.- யின் விபரம், ஏல நிபந்தனைகள் குறித்த விவரங்கள் மற்றும் இது சம்பந்தமான இதர விபரங்களை போக்குவரத்துத் துறை அலுவலகத்தின் தொலைப்பேசி எண்:0413 2280170 Extn.236 மூலம் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட எண் முன்பதிவு செய்யப்பட்ட வாகனம் அந்த எண்ணை முன்பதிவு செய்த நாளிலிருந்து 90 நாட்களுக்குப் பதிவு செய்ய தவறினால் அத்தகைய முன்பதிவு செயலிழந்துவிடும் மற்றும் அவருக்கு ஒதுக்கப்பட்ட எண் அவரது உரிமையை இழந்துவிடும்.

இந்த ஏலம் சம்பந்தப்பட்ட பண பரிவர்த்தனை அனைத்தும் Online Payment மூலம் இணைய தளம் வாயிலாக மட்டும் பெறப்படும். நேரிலோ மற்றும் காசோலையாகவோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

GOVT. OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

Sd/-

போக்குவரத்து ஆணையர்

**AMAN SHARMA**

**Transport Commissioner-cum-**
**Deputy Secretary to Govt. (Tr)**
**Puducherry**